# சீர்திருத்தங்களை வேண்டி நிற்கும் முஸ்லிம் தனியார் சட்டம்

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் (எம்.ஏ)

(அமர்வு — (ஒக்டோபர் – டிசம்பர் : 2021, மலர் –01, இதழ் – 02) இலத்திரணியல் இதழுக்காக எழுதப்பட்ட இவ்வாக்கத்தை இஸ்லாம் கல்வியில் வெளியிடுகின்றோம்.)

**அறிமுகம்**

இன்று, அனைவரின் கவனத்தையும் ஈர்த்து, எல்லா மட்டத்திலுள்ளவர்களின் பேசுபொருளாக மாறியுள்ள முஸ்லிம் தனியார் சட்டச் சீராக்கத்தின் முக்கிய விடயப் பொருளாகக் காணப்படும் பெண்ணின் திருமண வயது, பலதார மணம், திருமண ஒப்பந்தத்தில் பெண் கையொப்பமிடுதல், பெண் காழி நியமனம், வாதாட்டத்தில் சட்டத்தரணிகள் கலந்து கொள்ளல் என்பவை குறித்து மேற்கிளம்பியுள்ள பாரிய சர்ச்சை தொடர்பாக இவ்வாக்கம் தர்க்க ரீதியாக ஆராய்கிறது.

இலங்கையில் பன்னெடுங்கால வரலாற்றைக் கொண்ட, தவிர்க்க முடியாத ஒரு கலாசாரப் பாண்பாட்டியல்புகளோடுள்ள சமூகமாக முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். பன்மைத்துவ மத, கலாசாரப் பின்னணிகளைக் கொண்டு வாழும் மக்களைக் கொண்ட இலங்கையில் அவர்களின் நம்பிக்கைகளுக்கு ஏற்றாற்போல் தனியார் சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. கண்டியச் சட்டம் (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டம்) இது கண்டி வாழ் சிங்கள மக்களுக்கு மட்டுமான தனியார் சட்டமாக உள்ளது. தேச வழமைச் சட்டம் (1948 ஆம் ஆண்டின் இலக்க சட்டம்) இது யாழ்ப்பாணத் தமிழருக்கு மட்டும் உரித்தான சட்டம். மட்டக்களப்புத் தமிழருக்கு இது பொருந்தாது. முஸ்லிம் தனியார் சட்டம் (1951 இல் 13 ஆம் இலக்க சட்டத் திருத்தம்). இவ்வாறு, இங்கு இனங்களுக்குரிய பல்வேறுவகையான தனியார் சட்டங்கள் காணப்பட்ட போதிலும், முஸ்லிம் தனியார் சட்டத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அண்மைக் காலத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன.

முஸ்லிம் தனியார் சட்டம், பல்வேறு பரிமாணங்களை உள்வாங்கி, சிங்கள மன்னர்கள் காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை நான்கு கட்ட வரலாற்றைக் கடந்து, சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டு வந்திருக்கிறது. எனினும், அண்மித்த அரை நூற்றாண்டு கால இடைவெளியில் எவ்வித மாற்றமும் சீராக்கமும் கொண்டு வரப்படவில்லை என்ற விமர்சனம் இலங்கையில் ஒரு கொதி நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவே, இத்தகைய கொதிப்பான சூழ்நிலையில் சன்மார்க்க சட்ட விதிகளுக்கு முரண்படாத வகையிலும் நாம் வாழும் நாட்டின் சட்ட ஒழுங்கினடிப்படையிலும் ஒரு சீராக்கச் சிந்திப்பு இன்றியமையாததாக உள்ளது.

முஸ்லிம் தனியார் சட்டம் என்பது முற்று முழுதாக இஸ்லாமிய சன்மார்க்க நெறிமுறைகளை மாத்திரம் உள்ளடக்கிய ஒரு சட்டத் தொகுப்பு அல்ல என்ற விமர்சனத்தோடு, அச்சட்டம் பல மாற்றங்களை வேண்டி நிற்கிறது என்ற கோரிக்கையும் விவாதமும் நீட்சி பெற்றுச் செல்கிறது. “முஸ்லிம் புத்திஜீவிகள், அறிஞர் சித்திலெவ்வை போன்றோரையும் இணைத்துக்கொண்டு, விவாகப் பதிவொன்றைக் கொண்டு வருவதன் மூலம், ஊழல்களை ஒழித்து, நேர்மையைக் கடைப்பிடிக்க முடியும் என்ற சிந்தனையை முன்னெடுத்துச் சென்றனர். மேல்மாகாண அதிபரிடம் இதற்கான விண்ணப்பங்களை முன்வைத்தனர். ஒராபி பாஷா இதற்குத் துணை நின்றதாக குறிப்பிடப்படுகின்றது.” (முஹம்மது அக்ரம் 2006: 28)

அன்று, நடைமுறையில் இருந்த இஸ்லாமிய சட்ட வறையறைக்குட்படாத சீதனம் – வரதட்சணை போன்ற சில வழக்காறுகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, சில மார்க்கக் கட்டமைப்பு விதிமுறைகளும் இணைக்கப்பட்டுள்ளன என்றும், இச்சட்டத்தின் எல்லாப் பகுதிகளும் அல்குர்ஆனையும் சுன்னாவையும் துணையாகக் கொண்டு தயாரிக்கப்படவில்லை என்றும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்படுகிறது. அத்தோடு, அதன் சில பகுதிகள், பெண்களுக்குப் பாரபட்சம் காட்டுவதாகவும், இஸ்லாம் என்ற பெயரில் பழங்காலச் சமூக நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருக்கின்றன என்றும் விமர்சிக்கப்படுகின்ற அதேவேளை, இந்த நாட்டுக்குப் பல சட்டங்கள் அவசியமில்லை: ஒரு சட்டமே போதும் என்றும் முஸ்லிம் அல்லாதவர்களிற் சிலர் அண்மைக்காலங்களில் முஸ்லிம் தனியார் சட்டத்திற்கு எதிராகக் குரல் எழுப்பி வருகின்றனர்.

கி.மு. 4ம் நூற்றாண்டுகளுக்கு முந்திய கால அரபு தேசத்துடனான இலங்கையின் தொன்மையான தொடர்பு, 8ம் நூற்றாண்டில் இஸ்லாத்தைப் பின்பற்றிய அரபு முஸ்லிம்களுடனும் தனது தொடர்பை வலுப்படுத்திக் கொண்டது. 15ம் நூற்றாண்டின் பின்னர் இந்தியாவை நோக்கிய இலங்கையின் வணிகச் செயற்பாடு திசை மாற்றம் பெற்றதால், இலங்கை முஸ்லிம் சமூக உட்கட்டமைப்பு நியதிகள் பல்வேறு சிந்தனை சிக்கல்களுக்கு ஆட்பட்டது. இதன் தாக்கம் முஸ்லிம் தனியார் சட்டப் பகுதியிலும் செல்வாக்குச் செலுத்தியதோடு, இந்தியா, மலேசியா, இந்தோநேசியா போன்ற நாடுகளுடனான வர்த்தகத் தொடர்பினால் இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பண்பாடுகளில் மாற்றங்களும் ஏற்பட்டன.

இலங்கை முஸ்லிம்களில் கணிசமான ஒரு பகுதியினர் ஷாபியீ மத்ஹபைப் பின்பற்றி வருகின்றனர். தாம் பின்பற்றும் மத்ஹபுக்கு மாற்றமான எந்த பத்வாக்களும் (MMDA) விவாக – விவாகரத்துச் சட்டங்களில் உள்வாங்கப்படலாகாது. அதேபோல், தற்போது நடைமுறையில் உள்ள முஸ்லிம் தனியார் சட்டத்திலும் எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லை என்றும் அவர்கள் கூறிவருகின்றனர். அதேவேளை, முஸ்லிம் தனியார் சட்டத்தில் உள்ள சில விடயங்களை நடைமுறைக்கு ஒவ்வாததாகக் கருதும் முஸ்லிம் சமூகத்தினுள் இருக்கும் படித்த ஒரு குழுவினர் நடைமுறையில் உள்ள சட்டத்தில் நவீன அணுகுமுறைகள் கொண்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர்.

அறிவியலும் தொழிநுட்பமும் வேகமாக வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில், முஸ்லிம் பெண்களின் சமூகப் பிரவேசமும் பங்களிப்பும் உலகளவில் அதிகரித்துள்ளது. இலங்கை முஸ்லிம் பெண்களும் பாரிய சமூக மாற்றங்களுக்கு ஆளாகி இருப்பதையும் கவனத்தில் கொண்டு, பால்நிலைச் சமத்துவம் பற்றிய குர்ஆனிய குறிக்கோளுக்கு இணக்கமான வகையில் முஸ்லிம் தனியார் சட்டத்தில் சில பகுதிகள் திருத்தப்பட்டு, மேம்படுத்தப்பட வேண்டும் என்று புத்தி ஜீவிகள் தளத்தில் வலியுறுத்தப்பட்டுவருகிறது.

இந்த நிலையில், கடந்த ஆட்சியின் போது, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சலீம் மர்சூப் தலைமையில் ஒரு சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டு, அவர்களால் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. அவ்வறிக்கை இரண்டு அறிக்கைகளைக் கொண்ட ஓர் அறிகையாக் காணப்பட்டது. அதற்குக் காரணம் ஜம்இய்யத்துல் உலமாதான் என்ற விமர்சங்கள் எழுந்தன. புதிய சீர்திருத்தங்களை எதிர்ப்பதில் ஜம்இய்யத்துல் உலமா முன்னணியில் இருந்துள்ளது என்பதை கண்டி போரமின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“முஸ்லிம் சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் பூசல்களின் அடையாளமாகவும் முன்னேற்றத்துக்கு இசைவான முடிவுகளுக்கு முஸ்லிம் சமூகத்தில் ஒருமைப்பாட்டைக் காண்பது கடினம் என்பதற்குச் சான்றாகவும் அந்த ஓர் அறிக்கை வேறுபட்ட இரு அறிக்கைகளாகக் காட்சிதருகிறது. அதில் இடம்பெற்றுள்ள பிரதான அறிக்கை அந்த ஆணைக் குழுவின் தலைவர் சலீம் மர்சூபின் தலைமையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக்கொண்டது. அதே அறிக்கையில் இடம்பெற்றுள்ள சிறிய அறிக்கை பிரதான அறிக்கையை மறுக்கும், அல்லது விமர்சிக்கும் அறிக்கையாக இணைக்கப்பட்டுள்ளது. …சலீம் மர்சூபின் திருத்த

அறிக்கை இரண்டு அறிக்கைகளாக்கப்பட்டதற்கும் ஜம்இய்யத்துல் உலமாவின் செல்வாக்கே காரணமாக இருந்துள்ளதென்றும் கருதப்படுகிறது.”

முஸ்லிம் சமூகத்தின் பிரதான கூறாக அமைந்திருக்கின்ற தனியார் சட்டங்கள், இஸ்லாமிய சட்டப் பின்புலத்தில், இலங்கை சமூக மனப்பாங்கில் அவற்றின் வகிபாகம் பற்றிய ஆய்வும் மறு சீராக்கமும் காலத்தின் அவசியத் தேவையாக உணரப்பட்டுள்ளது. அது தொடர்பாக பல்றே மட்டங்களிலிருந்தும் பல்வேறு கருத்துகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. ஆகவே, இது குறித்து ஒரு பரந்துபட்ட பார்வையை செலுத்துவது அவசியமாகிறது.

**பெண்ணின் திருமண வயது**

தற்போதுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருமணம் தொடர்பான விடயங்கள் 17வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அதில், 12 என நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமண வயதெல்லை இலங்கையில் ஒரு பிரச்சினையாகவும் சர்ச்சையாகவும் மாறியுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு சட்ட ரீதியாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று பெண்ணியவாத அமைப்புகளும் சர்வதேசிய சில நிறுவனங்களும் முஸ்லிம் தனியார் சட்டத்திலுள்ள திருமண வயதெல்லை குறித்துக் குற்றஞ்சாட்டி வருகின்றன. இது தொடர்பில், முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தற்போது, இலங்கையில் பிரச்சினையாக உருவெடுத்துள்ள (Early Marriage) முஸ்லிம்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்ட, அல்லது இலங்கையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இது பல்வேறு இனங்களுக்கும் சமூகங்களுக்கும் மத்தியில் காணப்படுகின்ற சர்வதேச சமூகத்தின் பிரச்சினையாக உள்ளது.

உலகின் பல பாகங்களிலும் வருடம்தோறும் 15 மில்லியனுக்கும் மேற்பட்ட பெண்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள 18 வயதை அடைவதற்கு முன்பே திருமணமாகிவிடுகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில் பெண்களின் திருமண வயதெல்லை 12 ஆக இருப்பது சில சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏதுவாக அமைகிறது என்று ஒரு சிலர் கருதினாலும், இதன் காரணமாக ஏற்படும் உடல், உள, சமூக ரீதியான பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, திருமண வயதில் மாற்றம் தேவை என்ற கருத்து வலுவடைந்துள்ளது. எனவே, இது பற்றிய நடைமுறை ரீதியான சட்டத் தெளிவும் மார்க்க நிலைப்பாடும் இலங்கை முஸ்லிம்களுக்கு அவசியமாகிறது.

திருமண வயதெல்லையை அதிகரிப்பதற்கு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா உட்பட முஸ்லிம் சமய நிறுவனங்கள் பல எதிர்ப்புத் தெரிவிக்கின்றன என்று பத்திரிகைகள், தொலைத்தொடர்பு சாதனங்கள், முஸ்லிம் சமூகப் புத்திஜீவிகள் என பலதரப்பிடமிருந்தும் விசனம் வெளிப்படுத்தப்படுகிறது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் 12 என நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமண வயதெல்லை நேரடியான அல்குர்ஆன் – அஸ்ஸுன்னாவை அடிப்படையாகக் கொண்டதா? அல்லது கலாசாரப் பாரம்பரியப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டதா? அதில் மாற்றம் கொண்டு வருவதற்கு என்ன தேவை இருக்கிறது? என்ற கேள்விகளுக்கு விடை காணப்பட வேண்டும்.

திருமணம் சம்பந்தமான விடயங்களில் இஸ்லாமிய அறிஞர்களிடையே வித்தியாசமான கருத்துக்கள் காணப்படுகின்றன. அதில், திருமண வயதெல்லையும் ஒன்றாகும். திருமண வயதெல்லையை நிர்ணயம் செய்வது அவசியம் என்று கூறுவோர், தெளிவான “நஸ்” ஐ அடிப்படையாகக் கொண்டு வயதை நிர்ணயம் செய்யாமல், கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயித்துள்ளனர் என்று விமர்சிக்கப்படுகிறது.

இஸ்லாம் அனைத்துக் கலாசாரப் பின்னணிகளையும் கொண்ட மக்களுக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமானது என்பதால், அந்தந்தக் கால கலாசாரத்தினை அடிப்படையாகக் கொண்டு திருமண வயதெல்லையை நிர்ணயம் செய்ய இஸ்லாம் அனுமதித்துள்ளது என்று மற்றொரு சாரார் வாதிடுகின்றனர்.

ஒரு பெண் பருவமடைந்தவுடன் திருமண வயதை அடைந்துவிடுகின்றாள்; அவளுக்கு உடன் திருமணம் செய்துவிடலாம் என்று இன்னொரு சாரார் வாதிடுகின்றனர். அவர்களின் வாதத்திற்குரிய சில ஆதாரங்களையும் முன்வைக்கின்றனர். இவ்வாறு, திருமண வயதெல்லையைத் தீர்மானிக்கும் போது, கவனிக்க வேண்டி அளவுகோல் எது என்பது பற்றி இஸ்லாமிய அறிஞர்களிடம் வித்தியாசமான கருத்துக்களே உள்ளன.

அநாதைகள், பாதுகாப்பற்றோர், கண்காணிப்பற்றோர், சுற்றுச் சூழலால் பாதிப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுவோர் அகிய சூழ்நிலைக் கட்டமைப்புக்குள் வாழும் பெண் பிள்ளைகளுக்கு வயதை நிர்ணயம் செய்ய முடியாது. எனவே, அவர்களது பாதுகாப்பிற்காக அவர்கள் பருவ வயதை அடைந்தவுடன் திருமணம் செய்து வைக்க வேண்டும். அதனால், அவர்கள் பாதுகாக்கப்படுவர் என்று வயதை நிர்ணயம் செய்யும் தரப்பிற்கு எதிராக வாதிடுவோர் குறிப்பிடுகின்றனர்.

12 வயதில் ஒரு பெண் திருமணம் செய்து வைக்கப்படும்போது, அவளது கல்வி பாதிக்கப்படுகிறது. அதனால், அவள் குடும்ப வாழ்வில் ஆண்களின் அடுத்த பகுதியாகச் செயற்படும் தகைமையை பெறாதவளாகக் காணப்படுவாள். அதனால், குடும்ப வாழ்வில் புரிந்துணர்வற்ற தன்மையும் வேறு சில பிரச்சினைகளும் எழும். இவ்வாறு, 12 வயதில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்று வாதிடுவோர் தனது மகளுக்கு அதை நிறைவேற்றி வைப்பார்களா? என்று எதிர்வாதங்களும் கேள்விகளும் எழுப்பப்படுகிறது.

எனினும், இஸ்லாம் குடும்ப அலகை ஆரோக்கியமான சமூகத்தின் அடிப்படையாகக் கருதுகின்றது. அந்தவகையில், ஒரு பெண் பருவ வயதை அடைவது திருமணத்திற்கான ஒரு நிபந்தனையாக அமைகிறது என்பதில் இலங்கை முஸ்லிம்களிடம் ஒத்த கருத்து நிலவுகிறது. அவரவர் கலாசார சூழலுக்கேற்றாற்போல் வயதை நிர்ணயம் செய்வதற்கு இஸ்லாம் தடையாக இல்லை என்ற தெளிவு இலங்கை முஸ்லிம்களுக்கு அவசியமாகிறது.

**பெண்ணின் கையொப்பம்**

இலங்கையில் முஸ்லிம்களுக்கென்று “கடுத்தம்” என்ற விவாக – விவாகரத்து விடயங்களைப் பதிவு செய்யும் மரபு இருந்துள்ளது. நீதிமன்றமும் விவாகத்தை உறுதிப்படுத்தும் சாதனமாக இப்பதிவேற்றை அங்கீகரித்திருந்தது.

திருமணச் சான்றிதழில் பெண்ணின் கையொப்பம் தொடர்பான சர்சையும் முக்கிய கவனயீர்ப்பைப் பெற்றுள்ளது. பெண்ணின் கையொப்பம் பெறப்படுவதால், குடும்பவாழ்வில் ஏற்படும் பல்வேறு சிக்கல்கள் தவிர்க்கப்பட முடியும் என்று சீர்திருத்தத்தை ஆதரிப்போர் வாதிடுகின்றனர். பள்ளிவாசல்களுக்குள்தான் அதிகமான திருமணப் பதிவுகளும் நிகாஹ் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. அதன் போது எவ்வாறு பெண்ணின் கையொப்பத்தைப் பெற முடியும் என்று சிலர் அதற்கு எதிராக வாதிடுகின்றனர்.

இஸ்லாத்தில் பெரும்பாலான சட்டதிட்டங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானவையாகவே உள்ளன. எனினும், இரு சாராரின் உடற்கூறுகள், குணவியல்புகள், பலவீனங்கள், பொறுப்புகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, தனித் தனியான சட்டங்களையும் வழங்கியுள்ளது. அந்தச்

சட்டங்களின் நலன்களை நோக்கும் போது, மிகப் பெரிய தத்துவங்களையும் பயனையும் கண்டுகொள்ள முடியும். அந்த வகையில்தான் திருமணத்திற்கான பெண்ணின் சம்மதத்தையும் நோக்க வேண்டும்.

ஒரு பெண் தனக்குப் பிடித்த கணவனை, தன் விருப்பப்படி, எந்த அழுத்தமுமின்றி தேர்வு செய்வதற்கு அவளுக்கு முழுமையாக இஸ்லாத்தில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. "பெண்ணுடைய விருப்பமில்லாமல் நடத்தப்படும் திருமணம் செல்லாது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி : 5136) பெண்ணின் விருப்பத்தை அவளது அனுமதி என்று எடுத்துக் கொண்டு, திருமணச் சான்றிதழில் அவள் கையெப்பமிடுவதில் எந்தத் தவறையும் காண முடியாது.

**பலதார மணம்**

முஸ்லிம் தனியார் சட்டத்தின் 24வது பிரிவு பலதார மணம் தொடர்பகான நிபந்தனைகளை விளக்குகிறது. பல பகுதிகளை உள்ளடக்கியுள்ள முஸ்லிம் தனியார் சட்டங்களில் மாற்றங்கள் தேவை என்று அதிகம் பேசப்படுகின்ற ஒரு பகுதியாகப் பலதார மணம் தொடர்பான சட்டங்கள் அமைந்திருக்கின்றன. பலதாரமணம் பற்றிய இஸ்லாத்தின் நிபந்தனைகள் பற்றிய போதுமான புரிதல் இல்லாததால் முன்னைய காலத்திலும் தவறுகள் நடந்துள்ளன.

விவாகம் பற்றிய சட்டங்கள் ஆங்கிலேயர் காலத்தில் முழு இலங்கையிலும் வாழும் முஸ்லிம்களிடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போது, விவாகம் – விவாகரத்து பற்றிய விடயங்களைப் பதிவு செய்யும் ஒழுங்குகள் சீர்படுத்தபட்டிருக்கவில்லை. சில லெவ்வைமார்களின் கைகளில்தான் 'கடுத்தம்' எனப்பட்ட பதிவுத் துண்டுகள் காணப்பட்டன. இதிலுள்ள சில நடைமுறைச் சிக்கல்களினால் விவாகப் பதிவு ஒழுங்குகள் தேவையென 1871 ல் முஸ்லிம் பிரமுகர்கள் அரசைக் கோரினர். சட்டசபை உறுப்பினர் திரு. முத்துக்குமாரசாமியும் இதுபற்றிய ஒரு பிரேரணையை முன் வைத்தாலும், அரசு அதனை ஏற்காமையால் திருமண விடயங்களில் 'கடுத்தம்' முறையிலுள்ள குறைபாட்டைப் பயன்படுத்திக் கொண்டு, சிலர் தவறுகளைப் புரிந்தனர். சிலர் பல இடங்களில் பல திருமணங்களைப் புரிந்திருந்தாலும் சட்டநடவடிக்கை எடுப்பதற்கான வழிகள் காணப்படவில்லை. சில மரபு ரீதியான சிந்தனைப் போக்குடைய உலமாக்களும் பதிவு அவசியமில்லை என்று வலியுறுத்தினர். (முஹம்மது அக்ரம் 2006: 281)

இஸ்லாம் மக்காவில் அறிமுகமாவதற்கு முன்னரும் பலதார மணச் செயற்பாடு வரலாறு நெடுகிலும் இருந்து வந்துள்ளது. இஸ்லாம் இறுக்கமான நிபந்தனைகளுடன் பலதார மணத்திற்கு புதிய வடிவத்தையும் வரம்பையுமிட்டு அனுமதியளித்தது. அது, நியாயமான காரணங்களுக்காக அனுமதித்துள்ள சில விடயங்களை கண்டிப்பாகச் செய்தேயாக வேண்டும் என்ற எந்த விதியும் இல்லை. இத்தன்மையைப் புரிந்து கொள்ளாதவர்களாலேயே இஸ்லாத்தின் மீது விமர்சனங்கள் தொடுக்கப்படுகின்றன. அது போன்ற புரிதலற்ற விடயமாகவே பலதார மணம் தொடர்பான நீண்டகாலச் சர்ச்சையும் உள்ளது.

**காழிகளும் காழி நீதிமன்றங்களும்**

காழி நீதி மன்றங்கள் முஸ்லிம்களின் விவாக – விவாகரத்து, குடும்ப வாழ்வு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இயங்கும் அமைப்பாக உள்ளது. மிஷ்கீனும்மாவுக்கு எதிராக ஆங்கில ஆட்சியாளர்களால் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளின் பின்னர், காழி ஒருவரை நியமிக்கும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அந்த வகையில், காழிகளும் காழி நீதி மன்றங்களும் முஸ்லிம் தனியார் சட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. இதிலுள்ள சில குறைபாடுகளை மாத்திரம் முதன்மைப்படுத்துவோர் இந்த அமைப்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றனர்.

“இலங்கையின் நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 12வது பகுதியின் படி, நீதிச் சேவைகள் ஆணைக்குழு காழி நீதிபதிகளை நியமிக்கின்றது. இந்நியமனத்தைப் பெறுபவர், இஸ்லாமியத் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை வஸிய்யத், வக்ப், ஜீவனாம்சம் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆழ்ந்த அறிவுடையவராக இருக்க வேண்டும் என்பது கண்கூடு. ஆனால், அவ்வறிவுசார் புலமைத்துவத்தை மையப்படுத்தி அந்நியமனம் வழங்கப்படுவதற்கு ஏற்ற எந்த ஒரு வழிமுறையும் பயன்பாட்டில் இல்லை. தேசிய ரீதியான ஒரு பரீட்சையோ, அல்லது அல்–ஆலிம் பெறுபேறோ, அல்லது அரபுக் கல்லூரிகளின் பெறுபேறோ, அல்லது பல்கலைக்கழகப் பட்டமோ இங்கு தகுதியாகக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக காழி நீதிபதிகளின் தகுதி தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் சமூகத்தின் உண்டு. அதேபோன்று, அவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்ப்புகள் தொடர்பாகவும் வழக்கு இடம்பெற்ற போது, நிகழ்ந்த குளறுபடிகள் தொடர்பாகவும் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. இவை எல்லாக் காழிகளுக்கும் பொருந்தாவிட்டாலும், பல பிரதேசங்களிலும் இக்குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. எனவே, பெண் காழிகள் நியமனம் தொடர்பாக சிந்திக்கின்ற இக்காலகட்டத்தில் காழிகளுக்கான தகுதிகள் வரையறை செய்யப்படுவதோடு, அதற்கான வழிமுறையும் விரிவாக்கப்படல் வேண்டும். இல்லையெனில், இறைச் சட்டத்தின் முதுகெலும்பாக இருக்கின்ற நீதி, சரியாகவும் உரிய வகையிலும் கிடைக்காமல் போய்விடும். இது, பிரதானமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.” (இஸ்லாமிய சிந்தனை, மலர் : 39)

இதேவேளை, முஸ்லிம் தனியார் சட்ட மறுசீராக்கத்தில் காழி நீதிபதிகளின் விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு மெஜிஸ்ட்ரேட் நீதிபதியின் அந்தஸ்திற்குச் சமானமான இவர்களின் ஊதியமும் உரிமைகளும் அதிகாரமும் வசதிகளும் எந்த நிலையிலுள்ளது?

“…காழி நீதிபதிக்கு 11000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அதில், காழி நீதிபதிக்கு மாதாந்தம் ஆறு ஆயிரமும், அவரது செயலாளருக்கு மூன்று ஆயிரமும், வாடகைக்குப் பயன்படுத்தும் அலுவலகத்திற்கு ஆயிரமும், காகிதாதிகளுக்கு ஆயிரமும் ஒதுக்கப்படுகின்றது. ஆயிரம் ரூபா வாடகைக்கு ஓர் அலுவலகத்தை இந்தக் காலத்தில் எங்கேயேனும் பெறமுடியுமா? 6000 ஊதியத்திற்கு ஒரு நீதிபதி இயங்க முடியுமா? என்றெல்லாம் சிந்தித்தால், நமக்கு தலை சுற்றுத்தான் வரும்.” (ரவூப் ஸைன் 2016: 246)

எல்லா காழிகளினதும் தராதரங்கள் உயர்த்தப்பட்டு, இஸ்லாமிய சட்டத்திலும் நாட்டுச் சட்டதிலும் போதுமான தெளிவும் புலமையும் உள்ளவர்களாக அவர்கள் தகவமைக்கப்பட வேண்டும். அத்தோடு, காழி நீதவான்களின் சேவைகள் ஒழுங்கமைக்கப்படவும் வேண்டும்.

**பெண் காழிகள் நியமனம்**

தற்போதுள்ள காழி நீதிமன்றம், ஆண்களே காழிகளாக இருக்கக் கூடிய இடம் என்பதன் காரணமாக, அங்கு பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்று காழி நீதிமன்றம் தொடர்பாக முஸ்லிம் பெண்ணியவாதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். “நடைமுறையிலுள்ள தனியார் சட்டத்தின்படி, காழி நீதி மன்றில் பெண்கள் ஜூரிகளாகவும் அமர முடியாது.” இது தொடர்பான ஷரீஆவின் நெகிழும் – நெகிழாத் தன்மை தொடர்பாக விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன.

“பெண்கள் ஆட்சித் தலைமையை ஏற்கக் கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது. இது பெண்களின் உரிமையைப் பறிப்பதும் அவர்களை அவமானப்படுத்துவதுமாகும்” என்று முஸ்லிமல்லாதவர்களும் முஸ்லிம்களில் படித்த சிலரும் விமர்சனம் செய்கின்றனர். “பெண்கள் ஆட்சி செய்யும் சமுதாயம் வெற்றி பெறவே மாட்டாது” (புகாரி :4425) என்று ஹதீஸ் உள்ளது உண்மை தான்.

இந்த நபி மொழி தொடர்பான ஒரு சரியான புரிதல் காலத்தின் தேவையாக உள்ளது. இந்த நபிமொழியை மையப்படுத்தியே பெண்களைக் காழிகளாக நியமனம் செய்வது தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்விடயம் பரந்த கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். பல்வேறு தளங்களில் சர்ச்சைகளை மையப்படுத்தியுள்ள பெண் காழி நியமனம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தையும் அந்நியமனத்தில் நடைமுறையில் உள்ள சிக்கல்கள் தொடர்பான பரந்த ஆய்வையும் விரிந்த புரிதலையும் வேண்டி நிற்கிறது.

முஸ்லிம் பெண்களைக் காழிகளாக நியமிப்பதை அனுமதிக்கின்ற, அல்லது தடுக்கின்ற எந்த ஒரு நேரடி வசனமும் இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் நாம் அறிந்தவரை குறிப்பிடப்படவில்லை. எனினும், பெண்கள் இப்பதவியில் அமர்த்தப்படுவது குறித்து ஷரீஆவின் நிலைப்பாடு என்ன என்பது தனியார் சட்ட மறுசீரமைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்திவருவோர் எழுப்பும் முக்கிய கேள்வியாக உள்ளது.

ஒரு காழியைப் பொறுத்தவரை, திருமண விடயங்களை அவசியமான சந்தர்ப்பங்களில் நடாத்துதல்; சில சந்தர்ப்பங்களில் பெண்ணுக்கு வலியாக இருக்க வேண்டும் என்பது ஒரு பொதுவான விதியாக உள்ளது. வலி இல்லாத வேளையில், அல்லது நியாயமின்றி மறுத்தால், அல்லது ஒரு பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் திருமணத்தை நடத்தி வைக்கும் உரிமையைப் பெறுகின்றார்.

இன்று நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில், "ஒரு பெண்ணுக்கு மணம் முடித்து வைக்கத் தகுதி பெற்ற பொறுப்பாளர் – வலி இல்லாத பட்சத்தில், குறிப்பிட்ட பிரதேசத்தை சேர்ந்த காழியே அப்பெண்ணுக்கு வலியாக இருந்து மணம் முடித்து வைப்பார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பெண்ணும் காழியாக அமர முடியும் என வைத்துக்கொண்டால், ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் வலியாக இருக்க வேண்டிவரும். அப்படியாயின் அதையும் ஷரீஆ அங்கீகரிக்குமா? என்பது போன்ற பல கேள்விகள் இது குறித்து எழுப்பப்படுகின்றன.

திருமண வாழ்வில் அதிக சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் பெண்ணே ஆளாகின்றாள். சில போது, மணமுறிவு ஏற்பட்டால், அதனால் பாதிக்கப்படுவதும் பெண்தான். தீய எண்ணம் கொண்ட பல ஆண்கள் அபலைப் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்து விட்டு, மறுநாள் அவர்களைத் தெருவில் விட்டு விட்டு ஓடிவிடுகிறார்கள்.

பெண்கள் ஏமாற்றப்பட்டு விடக்கூடாது என்பதால், அவர்களுக்கு ஆண் பொறுப்பாளர் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. "ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு (அவளது ஆண் பொறுப்பாளர் இன்றி) திருமணம் செய்து வைக்கலாகாது. மேலும், (பொறுப்பாளர் யாரும் இன்றி) ஒரு பெண் தானாக திருமணம் செய்து கொள்ளக்கூடாது" என அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா : 1872)

"...பொறுப்பாளர்கள் பிரச்சினையில் ஈடுபட்டால், அப்போது பொறுப்பாளர் இல்லாதவருக்கு அதிகாரம் பெற்ற(தலை)வர் பொறுப்பாளர் ஆவார். (அஹ்மத் : 23704)

நடைமுறை ரீதியான சில பிரச்சினைகள் எழுவதோடு, "ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு (அவளது ஆண் பொறுப்பாளர் இன்றி) திருமணம் செய்து வைக்கலாகாது..." என்ற ஹதீஸையும் கவனத்தில் கொண்டு, இஸ்லாமிய ஷரீஆவின் கண்ணோட்டத்தில் முஸ்லிம் பெண்களை காழிகளாக நியமிப்பது தொடர்பான சரியான தெளிவு ஒன்றைப் பெறுவதும் அதன் அமுலாக்கம் பற்றி மேலும் ஆய்வு செய்வதும் அது தொடர்பாக ஆரோக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்வதும் மிக முக்கியமானது.

இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்களில் சிலர், பெண் முழு சமூகத்தின் கலீபா என்ற பாரிய அரசியல் தலைமைப் பொறுப்பை ஏற்பது தவிர, நீதிபதி போன்ற பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட முடியும் எனக் கூறுகின்றனர். தகுதி இல்லாத ஓர் ஆண் இருப்பதைவிட, தகமை பெற்ற ஒரு பெண் அப்பணியை செவ்வனே நிறைவேற்றுவாளாக இருந்தால், அதற்கு இஸ்லாம் அங்கீகாரத்தை வழங்கும் என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர். அத்தோடு, பெண்கள் சில தனிப்பட்ட விடயங்களைக் கூற முடியாது தவிப்பதை இல்லாமல் செய்ய முடியும் என்ற நியாயமும் முன்வைக்கப்படுவதால், காழி நீதிமன்றங்களில் பெண்களை நீதிபதிகளாக நியமிப்பது ஷரீஆவிற்கு முரணான செயற்பாடு அல்ல என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர்.

“இலங்கையில் ஆண்களுக்கான அரபுக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் அடிப்படையான பாட விதானங்களே பெண்களுக்கான அரபுக் கல்லூரிகளிலும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அங்கு பெண்களை காழிகளாக உள்வாங்குவதற்கேற்ப பாடவிதான மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதன் மூலம் எதிர்காலத்தில் அரபுக் கல்லூரிகளிலிருந்து பட்டம்பெற்று வெளியாவோர் காழி நீதிபதிகளாக சேவை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சட்டத் துறையை விசேட துறையாக கற்பதற்கு தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. மொத்தமாக நான்கு வருடங்களைக் கொண்ட இப்பாடநெறி இஸ்லாமிய, மேற்கத்தைய சட்ட மரபுகள் தொடர்பாகவும் இலங்கையின் சட்டத்துறை தொடர்பாகவும் விரிவான கற்கைகளை உள்வாங்கியுள்ளது. இதுவரையில் மூன்று பேர் பட்டம் பெற்று வெளியேறி இருப்பதோடு, இன்னும் எட்டு பேர் அத்துறையில் விசேட கற்கைகளை தொடர்ந்து கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பெண்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, இத்துறையில் பல்கலைக்கழகப் பட்டம்பெற்றவர்களை இந்நியமனத்திற்கு விதந்துரைக்க முடியும்.” (கலாநிதி எஸ்.எம்.எம்.மஸாஹிர் : 2017)

இதேபோல், பெண்கள் மட்டும் காழிகளாக அமர்த்தப்படும் காழி நீதி மன்றில், ஆண்கள் மணவாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும், உலகிற்குப் பெண் நபிமார்கள் அனுப்பப்படவில்லை; நபிமார்கள் அனைவரும் ஆண்களாகவே அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் பெண்களின் விடயங்களுக்கு நியாயமான தீர்வுகளை வழங்கியுள்ளார்கள். எனவே, பெண்களை காழிகளாக நியமித்துத்தான் அவர்களது பிரச்சினைகள் பேசப்பட வேண்டும் என்ற எந்தத் தேவையுமில்லை என் ஒரு வாதமும் மேலெழுகிறது. யார் இப்பதவியை வகிக்கின்றார்கள் என்பதைவிட இறையச்சம் நிறைந்த ஒருவராலேயே நீதியை நிலை நாட்ட முடியும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இவ்வாறான, பல்வேறு வகையான சர்ச்சைகளுக்கு மத்தியில் இது விடயமாக நிதானமாக அணுக வேண்டியுள்ளது.

### காழி நீதி மன்றங்களில் சட்டத்தரணிகள் தோன்றல்

காழி நீதி மன்றங்களில் சட்டத்தரணிகள் தோன்றுவது தொடர்பான சர்ச்சையும் இன்று ஒரு வாதப் பொருளாகியுள்ளது. இதிலுள்ள பகுத்தறிவு வாதங்கள் சில ஏற்புடையதாக இருந்தாலும், வேறுவகையான பிரச்சினைகளும் உள்ளன. பெண்கள்தான் அதிகமாக காழி நீதி மன்றங்களை நாடுகின்றார்கள். பெண்களில் அதிகமானவர்கள் சட்டம் தொடர்பான போதுமான அறிவு இல்லாதிருப்பதனாலும் சில காழி நீதிபதிகளின் பால்நிலைப் பாகுபாடுகளாலும் அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நீதி மன்றங்களில் சட்டத்தரணிகள் தோன்றுவதற்குரிய விதிகள் உள்வாங்கப்பட்டு, சட்ட சீராக்கம் நடைபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது.

நாம் இன, மொழி, சமூக, சமயப் பண்பாட்டுத் தாக்கங்கள் நிறைந்த எமது இலங்கை நாட்டின் (Plural Society) பன்மியச் சூழலில் வாழ்கின்றோம். இலங்கையில் மட்டுமல்லாது, இதேபோல் ஏனைய பல நாடுகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக பன்மியச் சூழலில் வாழ்கின்றார்கள். சன்மார்க்க விடயங்களைப் பின்பற்றுவதில் அவர்களும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றார்கள். அங்கு அவர்கள் சன்மார்க்க நிழலில் எடுத்துள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகளை நாம் அவதானிக்க வேண்டும். இதுதொடர்பாக, ஒவ்வொரு காலகட்டத்திலும் இஸ்லாமிய அறிஞர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, தீர்வுகளையும் முன்வைத்துள்ளனர். அவற்றின் பக்கமும் எமது கவனம் திரும்ப வேண்டும். கால மாற்றத்தில் பல்வேறு சவால்களை நாமும் எதிர்நோக்க நேரிடலாம். எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளும் சக்தியும் திறனும் இஸ்லாமிய ஷரீஆவுக்கு உண்டு. அத்தேடு, (Dynamic Nature) நியாயமான மாற்றங்களை அங்கீகரிக்கின்ற ஒழுக்க விழுமியத்தையும் இஸ்லாம் எமக்குக் கற்றுத் தந்துள்ளது. இந்த விடயம் தொடர்பான ஆய்வு இத்தோடு நிறைவடைகின்ற ஒன்றல்ல. கால மாற்றங்கள் நிகழும்போது, நியாயமான ஆய்வுகளும் ஆரோககியமான கலந்துரையாடல்களும் இடம்பெற வேண்டும். அந்தவகையில், முஸ்லிம் தனியார் சட்டச் சீராக்கம் தொடர்பான ஓர் ஆழமான, பரந்த, அறிவார்ந்த புரிதல் நமக்குத் தேவையாகிறது.

**உசாத்துணைகள் :**


1. நழ்ரதுன் நயீம் கலைக்கலஞ்சியம் (1418 H) தாருல் வஸீலா – ஜித்தா.
2. எம்.ஐ.எம்.அமீன் (2009) இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், (IBH- Col -9)
3. ஷக்ஸியத்துல் மர்ஆ அல் முஸ்லிமா (இணையப் பதிப்பு)
4. இஸ்லாமிய சிந்தனை மலர் : 39 (2017) நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம். பேருவளை.
5. நிழாமுல் உஸ்ரா பில் இஸ்லாம் (இணையப் பதிப்பு)
6. நழ்ரதுன் நயீம் கலைக்கலஞ்சியம் (1418 H) தாருல் வஸீலா – ஜித்தா.
7. அறிக்கை – கண்டி ஃபோரம் –
8. விடிவெள்ளி (02 ஆகஸ்ட் : 2019)
9. விடிவெள்ளி (30 ஜுலை : 2019)
10. https://www.colombotelegraph.com/index.php/mmda-will-the-cabinet-be-judiciously-cautious/
11. அக்ரம் முஹம்மது (2006) நடைமுறைக்கேற்ற இஸ்லாம், (IBH- Col -9)
12. றவூப் ஸெய்ன் (2016) சமகால இலங்கை முஸ்லிம்கள்,சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னு கல்தூன் ஆய்வகம், திஹாரி.